**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 17/2023**

**வழக்கு சாட்சி – அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. மணி. | ஜாதி | |
| தந்தை பெயர் | போஜன். | தொழில் சிறப்பு சார்பு ஆய்வாளர். | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 55/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2026.

**(எதிரி நீதிமன்றக் காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, தேனி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் ஏற்கனவே பணிபுரிந்த சார்பு ஆய்வளார் திரு.முத்துராமலிங்கம் என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்ற அடிப்படையிலும் வழக்குக் கோப்புக்களின் அடிப்படையிலும் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 12.10.2022–ம் தேதி, 09.00 மணிக்கு சார்பு ஆய்வளார் திரு.முத்துராமலிங்கம் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, நிலைய மனு எண். 971/2021–ஐப் பார்வையிட்டு, காவல் நிலையக் குற்ற எண். 344/2022, சட்டப் பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச–ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், 12.10.2022–ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று, சாட்சிகள் பிரேம்குமார் மற்றும் சரவணக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். பார்வை மகசர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், சம்பவயிட சாட்சிகள் 1 முதல் 4 வரையிலான சாட்சிகளையும் மற்றும் மகசர் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியை கடந்த 12.10.2022 – ஆம் தேதி 13.00 மணிக்கு தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் வைத்து கைது செய்து, உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்து, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர், இவ்வழக்கில் காயச் சான்று வழங்கிய மருத்துவர்

திரு. அருண்குமார் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, காயச் சான்று பெற்றுள்ளார். அந்தக் காயச் சான்று (2 பக்கங்கள் கொண்டது) அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. 1–வது எதிரி விமல் என்பவர் இளஞ்சிறார் என்பதால், அவருக்குத் தனியாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து, இளஞ்சிறார் நீதிக் குழுமத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். அதனைத் தொடர்ந்து வழக்கை விசாரணை செய்து, கடந்த 12.12.2022 – ஆம் தேதி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

அ.சா.1–டம் எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு, வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்துத் தயாரிக்கப்பட்டது என்றாலும், வழக்கின் எந்தவொரு சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், ஆஜர் எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரி சொன்ன நேரம் மற்றும் இடத்தில் வைத்துக் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.01.21 18:53:18 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
தேனி.